# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව සහ ගිණුම්

## வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள்

# Annual Performance Report and Accounts

# 2015

**සංචාරක සංවර්ධන හා ක්‍රිස්තියානි ආගමික කටයුතු අමාත්‍යාංශය**

**சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு**

**Ministry of Tourism Development & Christian Religious Affairs**

# வருடாந்த செயற்றிறன் அறிக்கை மற்றும் கணக்குகள்

# 2015

## சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

6ஆம் மாடி, ரக்ஷன மந்திரய, இல 21, வொக்ஹோல் வீதி, கொழும்பு 02

இவ்வறிக்கை 12 ஆம் திகதி செப்தெம்பர் மாதம் 2002 ஆண்டு பொது நிதிகள் திணைக்களம் வெளியிட்ட 402 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது

## உள்ளடக்கம்


பக்கம்

**அத்தியாயம் 1 – அமைச்சின் கண்ணோட்டம்**

| | | |
|---|---|---|
| 1.1 | அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு | 1-3 |
| 1.2 | அமைச்சில் உள்ள பிரிவுகள் | 4-6 |

**அத்தியாயம் 2 – வருடாந்த முன்னேற்றம்**

**அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்**

| | | |
|---|---|---|
| 2.1 | கருத்திட்டம் - மாகாண மட்டத்தில் ‘‘இல்ல விருந்தோம்பல்’’ கிராமங்களை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித் திட்டம் | 7-8 |
| 2.2 | சமூகசுற்றுலா அபிவிருத்தியினூடாக வறுமைத் தணிப்பு நிகழ்ச்சித் திட்டம் - நுவரேலியா மாவட்டம். (மாதிரிக் கருத்திட்டம்) | 8-9 |
| 2.3 | சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக சுற்றுலா வலயங்களை அமைத்தல் - நுவரேலியா | 9 |
| 2.4 | நுவரேலியா மாவட்டத்தில் மேலதிகமாக சுற்றுலா வலயங்களை மேம்படுத்தல் | 9-10 |
| 2.5 | தகவல் இளைப்பாறல் நிலையத்தின் முடிவுறா வேலைமையங்களை நிறைவு செய்தல் - மகியங்கனை | 10 |
| 2.6 | சிறு முயற்சியாளர்களுக்கு நட்சத்திர விருதுகளை அமுல்படுத்துவதன் ஊடாக சுற்றுலாக் கைத்தொழிலினை விருத்தி செய்தல். | 10-11 |
| 2.7 | சிறு முயற்சியாளர்களுக்கு நட்சத்திர விருதுகளை அமுல்படுத்துவதன் ஊடாக சுற்றுலாக் கைத்தொழிலினை விருத்திசெய்தல். | 11 |

**அத்தியாயம் 3 – வருடாந்த முன்னேற்றம்**

| | | |
|---|---|---|
| 3.1 | அமைச்சின் மீண்டு வரும் மற்றும் நிலையான செலவீனங்கள் | 12-14 |
| 3.2 | கருத்திட்டம் சார் நிதிச் செலவீனம் | 14 |
| 3.3 | பொது அலுவலருக்கான முற்பண “பீ” கணக்கு | 15 |

## அட்டவணைகள்


| அட்டவணை இல | விபரம் | பக்க இல |
| --- | --- | --- |
| 1.1 | சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் ஆளணி | 1-2 |
| 2.1 | மாகாணங்களுக்கான “இல்லவிருந்தோம்பல்” நிலையங்கள் | 8 |
| 3.1 | மீண்டுவரும் மற்றும் நிலையான செலவீனம் | 12 |
| 3.2 | நிகழ்சித்திட்ட இல மற்றும் இல :01 நடைமுறைச் செயற்பாடுகள் | 12 |
| 3.3 | நிகழ்சித்திட்ட இல மற்றும் இல :02 அபிவிருத்திச் செயற்பாடுகள் | 13 |
| 3.4 | நிகழ்சித்திட்ட இல மற்றும் இல :01 நடைமுறைச் செயற்பாடுகள் | 13 |
| 3.5 | கருத் திட்ட நிலையான செலவீனம் | 13 |
| 3.6 | நிகழ்சித் திட்ட இல மற்றும் இல :02 அபிவிருத்திச் செயற்பாடுகள் | 14 |
| 3.7 | நிகழ்சித் திட்ட நிதிச் செலவீனம் | 14 |
| 3.8 | பொது அலுவலருக்கான முற்பண “பீ” கணக்கு | 15 |

# நோக்கு

ஆசியப் பிராந்தியத்தில் மிகவும் நம்பகரமாக பயணம் செய்யக்கூடிய இலக்கு நாடாக இலங்கையை மிளிரச் செய்தல்.

# குறிக்கோள்

வினைத்திறன் மிக்கதும் பயனுடையதுமானதொரு சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கும் ஊக்குவிப்புக்குமான சூழலை உருவாக்க வழிவகுக்கும் அதேவேளை இலங்கையின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

## அமைச்சின் தொழிற்பாடுகள்

(2015.09.21 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1933/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்)

- கொள்கைகள் , நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்களை வகுத்தல்,மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் விடயங்கள் தொடர்பிலும், திணைக்களங்கள் நியதிச்சட்ட நிறுவகங்கள் ஆகியவற்றின் நோக்கெல்லையின் கீழான விடயங்கள் தொடர்பிலும் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வினைத் தொடர்தல்.
- சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நியமங்களை வகுத்தல்.
- சுற்றுலா முகவர்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- பொழுது போக்கு வசதிகள் மற்றும் அவை தொடர்பான செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
- ஒரு நல்லொழுக்கமுடைய சமூகத்தைக் கட்டியெழுப்பும் இலக்கையுடைய மக்கள் கொண்டுள்ள அவர்களது மதம் சார்ந்த பெறுமானங்களைப் போதிக்கும் வகையில் கொள்கை, நிகழ்ச்சித் திட்டங்கள், மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல் மேலும் அவற்றை கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்.
- கிறிஸ்தவ சமய அலுவல்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல்.
- அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கும் திணைக்களங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பில் அவதானமெடுத்தல்.
- அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

## அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள்

1. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
2. இலங்கை சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனம்
3. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம்
4. இலங்கை சுற்றுலா மாநாட்டுப் பணியகம்
5. கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்.

## அமைச்சின் குறிக்கோள்

- தேசிய பொருளாதாரத்திற்கான வருமான உருவாக்க வழிமுறையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு சுற்றுலாத்துறைக்கு வலுவூட்டுதல்.

- இலங்கையை மிகவும் விரும்பத்தக்க சுற்றுலா நாடாக திகழச் செய்யும் பொருட்டு சுற்றுலாத்துறையின் பங்கீடுபாட்டாளர்கள் மத்தியில் ஒருமைப்பாட்டினையும் கூட்டுப்பணியாற்றுகையினையும் மேம்படுத்தல்.

- சுற்றுலாத்துறையில் அறிவுத் திறன் மிக்க , ஆற்றல் மிக்க, படைப்பாற்றல் மிக்க, புத்தாக்கம் மிக்க மனித மூலதனத்தை விருத்தி செய்தல்.

- கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க சமூகத்தவரிடையே மதப் பெறுமானங்களை மேம்படுத்தும் வகையிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்து அவற்றை அமுல்படுத்துதல்.

# அத்தியாயம் 1

## அமைச்சின் கண்ணோட்டம்

1.1 அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு

1.2 அமைச்சில் உள்ள பிரிவுகள்

# 1.1 அமைச்சின் நிறுவனக்கட்டமைப்பு

**அறிமுகம்**

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி இல 1933/13 அறிவித்தலினூடாக உருவாக்கப்பட்டது.

**அமைச்சின் ஆளணி**

இவ்வமைச்சிற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த ஆளணி எண்ணிக்கை 70 ஆகும் ஆனால் தற்பொதுசேவையில் ஈடுபட்டுள்ளோர் 50 ஆகும். மேலும் இங்கு வெவ்வேறு மட்டங்களில் 20 ஆளணி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

**அமைச்சின் ஆளணித் தொகுப்பு**

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவசமய அலுவல்கள் அமைச்சிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட ஆளணிதொகுப்பு பின்வருமாறு.

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் ஆளணி தொகுப்பு

அட்டவணை 1.1


| பதவி | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போது உள்ள ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|
| செயலாளர் | 1 | 1 | - |
| மேலதிக செயலாளர் | 2 | 2 | - |
| பணிப்பாளர் | 2 | 1 | 1 |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 1 | - | 1 |
| பிரதம கணக்காளர் | 1 | 1 | - |
| உதவிச் செயலாளர் | 1 | 1 | - |
| உதவிச் /பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 2 | 1 | 1 |

| | | | |
|---|---|---|---|
| உதவிச் / பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 3 | 3 | - |
| உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | - | 1 |
| நிர்வாக அலுவலர் | 1 | - | 1 |
| மொழிபெயர்ப்பாளர் | 2 | 1 | 1 |
| தகவல் தொடர்பாடல் தெழில்நுட்ப அலுவலர் | 1 | - | 1 |
| செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 1 | 1 | - |
| அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 15 | 10 | 5 |
| அரச முகாமைத்துவ அலுவலர்கள் | 12 | 10 | 2 |
| கணக்கு உதவியாளர் | 1 | 1 | - |
| சுருக்கெழுத்தாளர் | 1 | 1 | - |
| புகைப்படக் கலைஞ்ஞர் | 1 | - | 1 |
| ஓளிப்படக்கருவி இயக்குபவர் | 1 | - | 1 |
| சாரதி | 10 | 10 | - |
| புகைப்பட உதவியாளர் | 1 | 1 | - |
| அலுவலக உதவியாளர் | 9 | 7 | 2 |

மூலம் : சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு

**சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு**

**அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு.**




விரிவாக்கம்: அ.உ- அபிவிருத்தி உதவியாளர் / அபிவிருத்தி உத்தியோகத்தர், மு.உ- முகாமைத்துவ உதவியாளர், அ.உ- அலுவலக உதவியாளர், த.தொ.தொ.உ-தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உதவியாளர், ஒ.ப.க-ஒளிப்படக் கலைஞ்ஞர், ஒ.உ-ஒளிப்பட உதவியாளர், நி.உ-நிதி உதவியாளர், சி/ஆ-சிங்களம் /ஆங்கிலம், த/ஆ: தமிழ் / ஆங்கிலம்.

# 1.2 அமைச்சில் உள்ள பிரிவுகள்

அமைச்சின் முற்று முழுதான நிர்வாக நடவடிக்கைகள் மூன்று பெரும் பிரிவுகளால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அப்பிரிவுகள் நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி , நிதி ஆகியனவாகும்.

## 1.2.1 நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவு

இப்பிரிவு மேலதிக செயலாளரின் (நிர்வாகம் /நிதி /கிறிஸ்தவ சமய அலுவல்கள்) கீழ் இயங்கிவருகிறது.

நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவானது அமைச்சினுள் கடமையாற்றும் அலுவலர்களுகான ஆட்சேர்ப்பு, வேலைவாய்ப்பு, பயிற்சி நெறிகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் ஓய்வூதிய நலன்கள் ஆகியவற்றைக் கையாள்வதுடன் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் உயர்ந்த தரத்திலான நிர்வாகச் செயற்பாடுகளை ஒன்றுபடுத்துவதற்கும் உதவிபுரிகிறது. மேலும் தனிநபர் நலன், அனைத்து நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் பொது உறவுகள் ஆகியவற்றையும் இப்பிரிவு கையாளுகின்றது.

பிரிவின் பிரதான நடவடிக்கைகள்:

- ஆட்சேர்ப்பு, வேலைவாய்ப்பு, பதவி உயர்வு, மற்றும் ஓய்வூதிய நலன்களை கையாளுதல்.
- அலுவலர்களின் அறிவு திறமை மற்றும் ஆளுமை ஆகியவற்றை வளர்த்தல்.
- அலுவலர்களின் செயற்றிறனை மதிப்பிடுவதுடன் அவர்களிற்கான ஊக்கத்தொகையைப் பெற்றுக்கொடுத்தல்.
- அலுவலர்களின் தரவுத்தளத்தை பராமரித்தல்.
- ஒழுக்காற்று நடவடிக்கைகள் .
- குறை கேள் நடவடிக்கைகள் .
- ஏனைய பொது நிறுவனங்களுடனான தொடர்பாடல் முகாமைத்துவம்
- மேலதிக சேவைகள் மற்றும் பெறுகைச் சேவை.
- ஊற்பத்தித்திறன் அபிவிருத்தி
- அரசாங்கதிதின் இலத்திரனியல் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

## 1.2.2 திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு

இப்பிரிவு மேலதிகசெயலாளரின் (அபிவிருத்தி) கீழ் இயங்கிவருகிறது.

திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவானது சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி வளர்ச்சியை ஒழுங்காக்கல் மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் இப்பிரிவு புதிய அபிவிருத்திக்கான சாத்தியப்பாடுகளை நுணுக்கமாக ஆராய்வதுடன் சுற்றுலாத் அபிவிருத்தியில் பரந்த சமுகப் பங்களிப்புடனான சிறந்த வளர்ச்சிக் கோட்பாடுகளை ஒன்றிணைத்து திட்டமிடல் அணுகுமுறையை கையாள்கிறது.
இப்பிரிவால் அமுல்படுத்தப்படும் நிகழ்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் நாட்டை அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்கிறது. அதுமட்டுமன்றி திட்ட மீளாய்வு, கண்காணிப்பு , நிலப்பயன்பாட்டு திட்டம் , சூழலியல் விஞ்ஞானம் ,வரலாற்றை பாதுகாத்தல் ஆகியவற்றையும் கருத்தில் கொள்கிறது.
திட்டமிடல் பிரிவு சுற்றுலா சார்ந்த அபிவிருத்தி முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்கிறது

விரிவான திட்டமிடல்: இப்பிரிவு அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் நீண்டகால திட்டங்களை தயாரிப்பதற்கு அந்நிறுவனங்களிற்கு உறுதுணைபுரிகிறது.

தற்போதைய திட்டங்கள் : இப்பிரிவு அமைச்சின் குறுகிய காலத் திட்டத்தை மாகாண சுற்றுலா அமைச்சுக்கள் மற்றும் பணியகங்களுடன் இணைந்து தயாரிக்கிறது.

திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவின் பிரதான கடப்பாடுகள்:

- இலங்கையை ஒரு சிறந்த சுற்றுலா தளமாக ஆக்குவதை நோக்காகக் கொண்டு இனங்காணப்பட்ட சுற்றுலா இடங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களைத் தயாரிப்பதுடன் அவற்றை அமுல்படுத்தல்.
- இத்திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு சுற்றுலாசார் நிறுவனங்கள், திணைக்களங்கள், மாகாணங்களை ஒருங்கிணைத்தல்.
- திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
- முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரிப்பதுடன் அவற்றை தொடர்புடைய நிறுவனங்களிற்கு வழங்குதல்.
- பாராளுமன்ற குழு நிலை கூட்டத்தொடருக்கான அறிக்கையைத் தயாரித்தல்.
- வருடாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தலும் வெளியிடலும்.
- திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

### 1.2.3 நிதி மற்றும் கணக்குப் பிரிவு.

இப்பிரிவு பிரதம கணக்காளரின் கீழ் இயங்கிவருகிறது.

இப்பிரிவு அமைச்சின் நிதிவளத்தை நிர்வகிக்கிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. நிதிப்பிரிவு நிதிச் செயற்பாட்டு நடவடிக்கையுடன் அமைச்சிற்கு பரந்த சேவையை வழங்குகிறது (கொள்வன, வழங்குனர்களின் செலவீனம், ஊதியம், செலவுக் கொடுப்பனவு, சில்லறைக் கணக்கு, பெறுகை கணக்குகள், ஏனைய நிதி செயற்பாடுகள). மேலும் நிதிப்பிரிவானது பரந்த அளவிலான நிதி செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் நிதியறிக்கையிடல் மற்றும் நிதி உதவிகளையும் (பிரதேச அணிகள், நிதிப்பயிற்சி நெறி, நிதி உத்தரவாதம் மற்றும் தொடர்பாடல்) மற்றும் தொழில் முறைச் சேவைகளையும் வழங்குகிறது (கொள்வனவு, திறைசேரி, காப்புறுதி மற்றும் ஓய்வூதியம்).

பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்:

- வருடாந்த வரைவு வரவு செலவு மதிப்பீட்டைத் தயாரித்தல்.
- ஒதுககீட்டுக் கணக்கைத் தயாரித்தல்.
- பாதீட்டு ஒதுக்கீட்டை தொடர்ந்து கண்ணாணித்தல்.
- அரச அலுவலர்களின் “பீ” கணக்கைத் தயாரித்தல்.
- நிதியறிகையை கையளித்தல்.
- அமைச்சின் சகல நிதி செயற்பாடுகளையும் கையாழுதல்

# அத்தியாயம் 2

## வருடாந்த முன்னேற்றம்

### அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்

**2.1** கருத்திட்டம் - மாகாணமட்டத்தில் ‘‘இல்ல விருந்தோம்பல்’’ கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

**2.2** சமூக சுற்றுலா அபிவிருத்தியினூடாக வறுமைத் தணிப்பு நிகழ்ச்சித் திட்டம் - நுவரேலியா மாவட்டம். (மாதிரிக் கருத்திட்டம்)

**2.3** சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக சுற்றுலா வலயங்களை அமைத்தல் - நுவரேலியா

**2.4** நுவரேலியா மாவட்டத்தில் மேலதிகமாக சுற்றுலா வலயங்களை மேம்படுத்தல்.

**2.5** தகவல் இளைப்பாறல் நிலையத்தின் முடிவுறா வேலை மையங்களை நிறைவு செய்தல் - மகியங்கனை

**2.6** சிறு முயற்சியாளர்களுக்கு நட்சத்திர விருதுகளை அமுல்படுத்துவதன் ஊடாக சுற்றுலாக் கைத்தொழிலினை விருத்தி செய்தல்.

**2.7** சிறு முயற்சியாளர்களுக்கு நட்சத்திர விருதுகளை அமுல்படுத்துவதன் ஊடாக சுற்றுலாக் கைத்தொழிலினை விருத்தி செய்தல்.

# 2. அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

## 2.1 கருத்திட்டம் - மாகாணமட்டத்தில் "இல்ல விருந்தோம்பல்" கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

மாகாண மட்டத்தில் இல்ல விருந்தோம்பல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான கருப்பொருளை உருவாக்கும் நோக்கில் இவ்வமைச்சானது மாகாண மட்டத்தில் சுற்றுலா அபிவிருத்தித்துறைக்குப் பொறுப்பாக உள்ள அலுவலர்களையும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரையும், பிராந்திய அபிவிருத்தி வங்கியின் அலுவலர்களையும் சப்பிரகமுவ பல்கலைக் கழகத்தின் வளவாளர்களையும் ஒருங்கிணைத்து ஒரு பயிற்சிப்பட்டறை நடாத்தியது.

**குறிக்கோள்:**

- உள்ளூர் சமூகங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதன் ஊடாக சுற்றுலாக் கைத்தொழிலை விருத்தி செய்வதுடன் வேலைவாய்ப்புக்களை பெருகுவதன் ஊடாக பொருளாதாரத்தினை விருத்தி செய்தல்.
- சமூகங்களின் பொருளாதார மட்டத்தை மேம்படுத்தல்
- சுற்றுலாப் பயணிகளின் முதல் அனுபவத்தின் ஊடாக உள்ளூர்கலை, கலாச்சாரபண்பாட்டு மற்றும் சாதாரண வாழ்க்கை முறையினை உள்ளூர் சமுதாயத்தின் ஊடாக முன்னேற்றுதல்.
- மேலதிக வருமானங்களை முன்னெடுத்தல்
- உள்ளூர் சமூகமட்டத்தில் உள்ளவர்களையும் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு இணைத்தல்

"இல்ல விருத்தோம்பல்" வேலைத்திட்டத்தின் ஊடாக ஒன்பது மாகாணங்களுக்கும் ரூபா 21.0 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 13 இல்ல விருந்தோம்பல் நிகழ்ச்சித ்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. இதற்காக ஒக்டோபர் 2015 இறுதி வரை செய்யப்பட்ட செலவினம் ரூபா 13.75 மில்லியன் ஆகும். விபரம் பின்வருமாறு

**மாகாணங்களுக்கான "இல்ல விருந்தோம்பல்" நிலையங்கள்**

அட்டவணை: 2.1

| இல | மாகாணம் | மாவட்டம் | கிராமம் | ஒதுக்கீடு ரூ.மி | செலவீனம் ரூ.மி |
|---|---|---|---|---|---|
| 1 | மேல் மாகாணம் | கொழும்பு | வலலாவிட்ட, மதுரவெல ,அம்பிட்டிகல | 3.00 | |
| 2 | மத்தியமாகாணம் | கண்டி | கீலோயா | 3.00 | 2.00 |
| 3 | தென் மாகாணம் | காலி | கண்ணேலிய | 3.00 | 0.65 |
| 4 | வடமாகாணம் | யாழ்ப்பாணம் | வட்டுக்கோட்டை | 3.00 | 0.98 |
| 5 | கிழக்குமாகாணம் | மட்டக்களப்பு | கல்லடி,பாசிக்குடா | 3.00 | 2.00 |
| 6 | வடமேல் மாகாணம் | குருநாகல் | யாப்பகமுவ | 3.00 | 0.99 |
| 7 | வடமத்தியமாகாணம் | அநுராதபுரம் | இசுறுமுனிகம | 3.00 | 2.01 |
| 8 | ஊவாமாகாணம் | பதுளை | அல்ல | 3.00 | |
| 9 | சப்பிரகமுவமாகாணம் | இரத்தினபுரி | பதவிகம்பொல,சிலோகம | 6.00 | 3.42 |

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

அமைச்சின் தலைமையில் விருந்தினர் உபசரிப்பு மாதிரியானது முன்னெடுக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்தையும் தேவைகளையும் நிறைவுசெய்வதுடன் மேலதிகமாக கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதுடன் மேலதிக வேலை வாய்ப்பு வருமானத்தை பெருக்கிக்கொள்ளல்.

## 2.2 சமூக சுற்றுலா அபிவிருத்தியினூடாக வறுமைத் தணிப்பு நிகழ்ச்சித் திட்டம் - நுவரேலியா மாவட்டம். (மாதிரிக் கருத்திட்டம்)

நுவரேலியா மாவட்டத்தில் 3 பேருக்கு ஒருவர் வறுமையின் பிடியில் உள்ள தன்மை கடந்த காலம் 2006/07 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுப்படி 33.3 வீதமாகவுள்ளது. இந்த அமைச்சின் ஊடாக பொருளாதார முன்னேற்றம் மற்றும் வேலை வாய்ப்புகளின் அதிகரித்தல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் சிறுமுதலீட்டாளர்களின் ஊக்குவித்தல் போன்ற பல நோக்கங்களின் அடிப்படையில் முன் நிறுத்தி தொடக்கப்பட்டது. இதற்கான ரூபா 10.0 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

**குறிக்கோள்:**

சிறு முதலீட்டாளர்கள் சமூகத்தினை இணைப்பதன் ஊடாகசமூகமட்டத்தில் சுற்றுலாத் துறையினையும் அதனுடன் இணைந்த உற்பத்தியினை இணைத்து வருமானத்தை அதிகரித்தல்.

- புதிய சந்தைவாய்ப்புக்களை உருவாக்குதலும் தொழில் வாய்ப்புகளை பெருக்குவதன் மூலம் சுற்றுலாக் கைத்தொழிலை விருத்திசெய்தல்
- சுற்றுலாக் கைத்தொழிலை விருத்தி செய்தலும் அதன் பெருமைகளை கிராம மக்களுக்கு கொண்டு செல்வதன் ஊடாகவளர்த்தல்.

நேர்முகப்பரீட்சை மூலம் தகுதியான விண்ணபதாரிகள் தெரிவுசெய்யப்பட்டனர். (300 விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டார்கள்) கடன் வசதிகள் வழங்குவதற்காக பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைத்சாத்திடப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

200 சிறு முயற்சியாளர்கள் பயன் அடைவதன் ஊடாக வருமானத்தைப் பெருக்கி சிறப்பான வாழ்க்கைத் தரத்தைப் பெறுவர்.

## 2.3 சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக சுற்றுலா வலயங்களை அமைத்தல் - நுவரேலியா

சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக வல்லப்பனை, கொத்தமலை, நுவரேலியா பிரதேச செயலகங்கள் ஊடாக 10 இடங்களுக்கு ரூபா 10.0 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இலக்கு**

- 10 சுற்றுலாக் காட்சி இடங்களைஅபிவிருத்திசெய்தல்
- இந்த இடங்களுக்குமுதலீட்டாளர்களைவரவழைத்தல்
- சுற்றுலாக் கைத்தொழில்களை அதிகரிக்கவும், வினைத்திறமை ஆக்கவும், பங்கு பற்றுதல் முறைமையினை முன்னெடுத்தல், நேரடிமற்றும் மறைமுக வேலைவாய்பினை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல்.
- நுவரேலியா மாவட்டத்தில் 600 விண்ணப்பங்கள் 5 பிரதேச செயலகங்கள் ஊடாக அனுமதிக்கப்பட்டது.
- சிறுகடன் வழங்கல் தொடர்பாககிராமிய அபிவிருத்தி வங்கியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள்**

- உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் அதிகரித்தல்
- சமூகத்தில் 200 தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல்
- கிராமியமக்களையும் சுற்றுலாக் கைத்தொழிலில் இணைத்தல்

## 2.4 நுவரேலியா மாவட்டத்தில் மேலதிகமாக சுற்றுலாவலயங்களை மேம்படுத்தல்

கிராம பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளிற்கு ரூபா 200.0 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இலக்கு**

- உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல்
- வருமான மேம்பாட்டை பெருக்குதல்

**எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள்**

- 5 சுற்றுலா மையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- 200 வருமான வாய்ப்புக்களை விருத்தி செய்தல்
- சுற்றுலாக் கைத்தொழில் கிராமமக்களின் பங்களிப்பை மேலும் விருத்தி செய்தல்.

## 2.5 தகவல் இளைப்பாறல் நிலையத்தின் முடிவுறா வேலைமையங்களை நிறைவுசெய்தல் - மையங்கனை

இறுதிகட்டுமான வேலைகளுக்காக ரூபா 15.0 மில்லியன் மகியங்கனை தகவல் இளைப்பாறல் நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டது.

**இலக்கு**

- சுற்றுலா தகவல் நிலையங்கள் தகவல்களை வழங்குதல்
- சிறு முயற்சியாளர்களின் சிறுகைத்தொழில் வெளியீடுகளை அதன் ஊடாக விற்பனை செய்து வருமானத்தை சம்பாதித்தல்.
- கிராமிய சுற்றுலாக் கைத்தொழிலை மத்திய மாகாணத்தில் விருத்தி செய்தல்.

**எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள்**

- நேரடியாகவோ மறைமுகமாகவோ தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்தல்.

## 2.6 சிறு முயற்சியாளர்களுக்கு நட்சத்திர விருதுகளை அமுல்படுத்துவதன் ஊடாக சுற்றுலாக் கைத்தொழிலினை விருத்தி செய்தல்.

நட்சத்திர விருதுகளை சிறு முயற்சியாளர்களுக்கு வழங்குவதற்காக இத்திட்டத்திற்கு ரூபா 5.0 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இலக்கு**

- சிறு முயற்சியாளர்களது பங்களிப்பை விருத்தி செய்தல் மற்றும் உபசரிப்பு கைத்தொழிலை விருத்தி செய்தல்
- சேவைத் துறையின் பங்களிப்பினை அபிவிருத்தி செய்வதன் ஊடாக சிறுமுயற்சியாளர்களினதும் தேசிய பொருளாதாரத்தை வளர்த்தல்.

**எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள்**

200 சிறு முயற்சியாளர்களின் கைத்தொழிலை விருத்தி செய்தல்.

## 2.7 ஒன்பது மாகாணங்களுக்குமான பயிற்சிப் பட்டறை

ரூபா 2.0 மில்லியன் ஒதுக்கப்பட்டு ஒன்பது மாகாணங்களுக்கும் இரண்டு பயிற்சிப் பட்டறைகள் மட்டுமே நடாத்தப்பட்டது.

**இலக்கு**

- சுற்றுலாத் துறையின் விருத்தி தொடர்பாக அறிவினை பெற்றுக்கொள்வதற்காக நேரடி மற்றும் மறைமுக பங்களிப்புகள் (அரச உத்தியோகத்தர்கள், உள்ளூர் சபைகள்)
- சுற்றுலா தொடர்பான விழிப்புணர்வினை விருத்தி செய்தல்

# அத்தியாயம் 3

## நிதி முன்னேற்றம்

| | |
|---|---|
| **01** | அமைச்சின் மீண்டுவரும் மற்றும் நிலையான செலவீனங்கள் |
| **02** | கருத்திட்டம் சார் நிதிச் செலவீனம் |
| **03** | பொது அலுவலருக்கான முற்பண பீ கணக்கு |

# கணக்கியலும் நிதிச் செயற்பாடும்

## 3.1 அமைச்சின் மீண்டுவரும் மற்றும் நிலையான செலவீனம்.

**செலவுத் தலைப்பு - 159**
**மீண்டு வரும் செலவு மற்றும் மூலதனச்செலவு**

அட்டவணை 3.1

| விபரம் | 2015 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது Rs'000 | 2015 உண்மை ஒதுக்கீடு Rs'000 | 2015 உண்மைச் செலவு Rs'000 | 2015 சேமிப்பு Rs'000 |
|---|---|---|---|---|
| மீண்டு வரும் செலவு | 56,500 | 56,000 | 43,331 | 12,669 |
| மூலதனச் செலவு | 112,550 | 113,050 | 21,186 | 91,864 |
| **முழு மொத்தம்** | **169,050** | **169,050** | **64,517** | **104,533** |

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

**நிகழ்ச்சித் திட்டம் இல. 01 - தொழிற்பாட்டு நடவடிக்கைகள்**

அட்டவணை 3.2

| விபரம் | 2015 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது Rs'000 | 2015 உண்மை ஒதுக்கீடு Rs'000 | 2015 உண்மைச் செலவு Rs'000 | 2015 சேமிப்பு Rs'000 |
|---|---|---|---|---|
| மீண்டு வரும் செலவு | 56,500 | 56,000 | 43,331 | 12,669 |
| மூலதனச் செலவு | 12,550 | 13,050 | 8,725 | 4,325 |
| முழு மொத்தம் | **69,050** | **69,050** | **52,056** | **16,994** |

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

**நிகழ்ச்சித் திட்டம் இல. 02 – அபிவிருத்திச் செயற்பாடுகள**

அட்டவணை 3.3

| விபரம் | 2015 வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது Rs'000 | 2015 உண்மை ஒதுக்கீடு Rs'000 | 2015 உண்மைச் செலவு Rs'000 | 2015 சேமிப்பு Rs'000 |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவு | - | - | - | - |
| மூலதனச் செலவு | 100,000 | 100,000 | 12,461 | 87,539 |
| முழு மொத்தம் | **100,000** | **100,000** | **12,461** | **87,539** |

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

**செலவுத்தலைப்பு – 159**
**மீண்டுவரும் செலவு - கருத்திட்டம்**
**நிகழ்ச்சித்திட்டம் இல. 01 - தொழிற்பாட்டு நடவடிக்கைகள**

அட்டவணை 3.4

| விபரம் | 2015 வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது Rs'000 | 2015 திருத்தப்பட்ட ஒதுக்கீடு Rs'000 | 2015 செலவீனம் Rs'000 | 2015 சேமிப்பு Rs'000 |
|---|---|---|---|---|
| செயற்றிட்டம் 01 | 14,800 | 14,300 | 11,127 | 3,173 |
| செயற்றிட்டம் 02 | 41,700 | 41,700 | 32,204 | 9,496 |
| முழு மொத்தம் | **56,500** | **56,000** | **43,331** | **12,669** |

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

**மூலதனச்செலவு -செயற்றிட்டம்**

அட்டவணை 3.5

| விபரம் | 2015 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது Rs'000 | 2015 உண்மை ஒதுக்கீடு Rs'000 | 2015 உண்மைச் செலவு Rs'000 | 2015 சேமிப்பு Rs'000 |
|---|---|---|---|---|
| செயற்றிட்டம் 01 | 5,000 | **5,500** | **3,209** | **2,291** |
| செயற்றிட்டம் 02 | 7,550 | 7,550 | 5,516 | 2,034 |
| முழு மொத்தம் | **12,550** | **13,050** | **8,725** | **4,325** |

மூலம் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

**நிகழ்ச்சித்திட்டம் இல. 02 - அபிவிருத்தி செயற்பாடுகள்**

அட்டவணை 3.6

| விபரம் | 2015 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது Rs'000 | 2015 உண்மை ஒதுக்கீடு Rs'000 | 2015 உண்மைச் செலவு Rs'000 | 2015 சேமிப்பு Rs'000 |
|---|---|---|---|---|
| செயற்றிட்டம் 03 | 100,000 | 100,000 | 12,461 | 87,539 |
| முழு மொத்தம் | **100,000** | **100,000** | **12,461** | **87,539** |

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

## 3.2 நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியிடல் செலவுகள்

அட்டவணை 3.7

| விபரம் | 2015 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது Rs'000 | 2015 உண்மை ஒதுக்கீடு Rs'000 | 2015 உண்மைச் செலவு Rs'000 | 2015 சேமிப்பு Rs“000 |
|---|---|---|---|---|
| உள்நாட்டு நிதி | 169,050 | 169,050 | 64,517 | 104,533 |
| வெளிநாட்டு கடன்கள் | - | - | - | - |
| வெளிநாட்டு கொடைகள் | - | - | - | - |
| மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு கடன்கள் | - | - | - | - |
| மீளளிக்கக்கூடிய வெளிநாட்டு கொடைகள் | - | - | - | - |
| எதிரணை நிதியம் | - | - | - | - |
| வெளிநாட்டு நிதி தொடர்பான உள்நாட்டுச் செலவு | - | - | - | - |
| விசேடசட்ட சேவைகள் | - | - | - | - |
| **மொத்தம்** | **169,050** | **169,050** | **64,517** | **104,533** |

மூலம்: சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு

## 3.3 அரச சேவையாளர்களின் "பி" முற்பணக்கணக்கு

**விடய இல. 159011,159012**

அட்டவணை 3.8

| விபரம் | அதிகபட்ச பற்று எல்லை | குறைந்தபட்ச செலவு எல்லை | அதிகபட்ச பற்று மீதி |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டு சட்டம் தொடர்பான எல்லை | 3,000,000 | 20,000 | 18,000,000 |
| மீளாய்வு எல்லை | - | - | - |
| | **நடப்பு ஆண்டிற்க்கான பற்று** | **நடப்பு ஆண்டிற்க்கான செலவு** | **ஆண்டிறுதியில் பற்று மீதி** |
| நடப்பு ஆண்டிற்கான உண்மை<br>1. 159011<br>2. 159012 | 1,671,715<br>5,189,390 | 1,106,106<br>- | 565,609<br>5,189,390 |
| **மொத்தம்** | **6,861,105** | **1,106,106** | **5,754,999** |

மூலம் :சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய விவகார அமைச்சு